**[பன்னாட்டுக் குறிப்பு]**
**தரவு திரட்டல், செயல்முறைப்படுத்தல் மற்றும் பரிமாற்ற அறிவிப்பு**
**பணியாளர் ஈடுபாடு கருத்துக்கணிப்பிற்கு**

Ball Corporation ("நிறுவனம்") மற்றும் அதன் செயல்படும் குழுக்கள், துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ("Ball", "நாம்" அல்லது "நாங்கள்"), உங்களுக்குப் பணி வழங்குநராக உள்ள பெருநிறுவனக் குழு உறுப்பினர் உள்பட, உலகத் தரத்திலான பணி அனுபவம் ஒன்றை வழங்கப் பணியாற்றுகிறார்கள். பணியாளர் ஈடுபாடு மற்றும் தக்கவைத்தலை மேம்படுத்துவதற்கு நமக்காக Ball அவ்வப்போது பணியாளர் ஈடுபாடு கருத்துக்கணிப்பை ("கருத்துக்கணிப்பு") நடத்தும். கருத்துக்கணிப்பைப் விநியோகிக்கவும் நிர்வகிக்கவும் Ball Corporation, தன் சார்பாக, மற்றும், வேறு ஒரு நிறுவனம் என்றால், உங்களுக்குப் பணி வழங்குநராக உள்ள பெருநிறுவனக் குழு உறுப்பினர் சார்பாக, Ball -இன் மூன்றாம் தரப்பு பணியாளர் ஈடுபாடு ஆலோசகரான WTW, Qualtrics மற்றும் பிற சேவை வழங்குநர்களைத் ("கருத்துக்கணிப்பு வழங்குநர்") தக்கவைத்துள்ளது. Ball corporation மற்றும் வேறு ஒரு நிறுவனம் பெருநிறுவன குழு உறுப்பினராக இருந்தால், அதாவது உங்கள் பணியமர்த்துநர் கூட்டாக இந்தக் கருத்துக்கணிப்பின் கட்டுப்பாட்டாளர் ஆவார்கள். உங்களுக்குப் பணி வழங்குபவருடைய தொடர்பு விவரங்களை நீங்கள் இங்கு காணலாம்: **[https://ballconnect.ball.com/home]**.

நாங்கள் வெளிப்படையாக இருக்க உறுத்திக்கொண்டுள்ளோம், கருத்துக்கணிப்பிற்குப் பதிலளிக்கும்போது நீங்கள் தன்னார்வத்துடன் வழங்கும் தனிப்பட்ட தரவுகளைத் திரட்டுதல், பயன்படுத்துதல், வெளிப்படுத்துதல், பன்னாட்டளவில் பரிமாற்றம் செய்தல் மற்றும் பிற செயல்முறைப்படுத்தல் தொடர்பான எங்கள் நடைமுறைகளைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ விரும்புகிறோம்.

தரவு திரட்டல், செயல்முறைப்படுத்தல் மற்றும் பரிமாற்ற அறிவிப்பு ("ஈடுபாடு கருத்துக்கணிப்பு **அறிவிப்பு"** அல்லது **"அறிவிப்பு"**) கணக்கெடுப்பை நிர்வகித்தல் மற்றும் உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செயல்முறைப்படுத்தல்பற்றிப் பின்வரும் தலைப்புகளைக் கையாள்கிறது:

- திரட்டுதல், பயன்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்துதல்
- உங்கள் தனிப்பட்ட தரவைப் பன்னாட்டளவில் பரிமாற்றுதல்
- செயல்முறைப்படுத்தலுக்கான சட்ட அடிப்படை
- தக்கவைத்தல்
- கூடுதல் தகவல்கள்

இந்த அறிக்கைக்கான நோக்கங்களுக்கென,

- **"தனிப்பட்ட தரவு"** என்பது, அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய தனி நபர் தொடர்பான எந்த ஒரு தகவலையும் குறிக்கிறது.

- **"செயல்முறைப்படுத்தல்"** என்பது, தனிப்பட்ட தரவு தொடர்பான எந்த ஒரு செயல்பாட்டையும் குறிக்கிறது, எடுத்துக்காட்டாக, தனிப்பட்ட தரவைத் திரட்டுதல், பெறுதல், அணுகுதல், பயன்படுத்துதல், வெளிப்படுத்துதல், சேமித்தல் அல்லது நீக்குதல்.

## <u>வரம்பு</u>

இந்த அறிவிப்பானது கணக்கெடுப்பை நடத்தும் நோக்கங்களுக்கெனச் செயல்முறைப்படுத்தப்படும் தனிப்பட்ட தரவுக்குமட்டும்தான் பொருந்தும். நிறுவனமும் Ball பெருநிறுவனக் குழுவின் மற்ற உறுப்பினர்களும் உங்கள் தனிப்பட்ட தரவுகளை எப்படிச் செயல்முறைப்படுத்துகிறார்கள் என்பது, தனியுரிமைக் கொள்கை - பணியாளர்கள் [**இதற்கான இணைப்பை நுழையுங்கள்** Privacy-Policy-Employees.pdf (ball.com)] என்ற இடத்தில் பணியாளர்களுக்கென விவரிக்கப்பட்டுள்ளது.

## <u>திரட்டுதல், பயன்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்துதல்</u>

<u>திரட்டல்:</u> இந்தக் கணக்கெடுப்பு சுருக்கமானது மற்றும் <u>தன்னார்வத்தின் அடிப்படையிலானது</u>. ***<u>தன்னார்வத்தின் அடிப்படையிலான இந்தக் கணக்கெடுப்பை நீங்கள் நிறைவுசெய்யத் தீர்மானிக்கிறீர்களா, அல்லது, அவ்வாறு செய்ய மறுக்கிறீர்களா என்பது உங்கள் பணியின் விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் எந்தத் தாக்கத்தையும் கொண்டிருக்காது.</u>*** இந்தக் கணக்கெடுப்பின் நோக்கம், Ball Corporation மற்றும் உங்களுக்குப் பணி வழங்குபவர் (மாறியிருந்தால்) பணியாளர் ஈடுபாட்டை மேம்படுத்தவும் திறமையாளர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும் உதவுவதுதான். நீங்கள் கருத்துக்கணிப்பைத் தொடரத் தீர்மானித்தால், சில கேள்விகளுக்குப் பதிலளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். இந்தக் கேள்விகளுக்கு பதிலளிப்பது கட்டாயமில்லை, எவற்றுக்குப் பதிலளிப்பது, எவற்றுக்குப் பதிலளிக்கவேண்டாம் என்று நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். திறந்த முனைக் கேள்விகளுக்கு, உங்கள் கருத்துகள் எழுதப்பட்டபடி வழங்கப்படும், அதனால், தயவுசெய்து, அங்கு உங்கள் பெயரைக் குறிப்பிடவேண்டாம், அல்லது, வேறு தனி நபர்களுடைய பெயர்களைச் சேர்க்கவேண்டாம். இந்தக் கருத்துக்கணிப்பு தனிப்பட்ட முறையில் தனி நபர்களுடைய குறைகளுக்கு தீர்வு காணவேண்டியவற்றை புகார் செய்யும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளவும். அதுபோன்ற பிரச்சனைகளுக்கு, தயவுசெய்து, மனித வளப் பிரதிநிதி அல்லது இணக்க இணை அமைப்பைத் தொடர்புகொள்ளுங்கள்.

கருத்துக்கணிப்பு வழங்குநர் நீங்கள் தகவலை வழங்கத் தேர்ந்தெடுக்கும் அளவுக்குப் பின்வரும் தனிப்பட்ட தரவுகளைத் திரட்டுவார்:

- தனிநபர் **தகவல்கள்,** வயதுக் குழு, பாலினம் மற்றும் இனக்குழு உள்பட;

- **பணித் தகவல்கள்,** நிறுவன நிலை, பணிச் செயல்பாடு, துறை, தரநிலை, நிலை/அடுக்குநிலை, பணி இடம், மேற்பார்வையாளர் மற்றும் பணி அடுக்கு, பணிக் காலகட்டம் மற்றும் பணி நிலை உள்பட.
- Ball -இன் பணியிடச் சூழல், பெருநிறுவனப் பண்பாடுபற்றிய உங்கள் தனிப்பட்ட அனுபவம் தொடர்பான **உங்கள் கருத்துகள் மற்றும் தரநிலைகள்** மற்றும் உங்கள் மன நிறைவு நிலை.
- நீங்கள் உங்களுக்குப் பணி வழங்குபவரிடம் தொடர்ந்து வேலை செய்வதற்கான காரணம்(காரணங்கள்) மற்றும் நீங்கள் விலகத் தூண்டக்கூடிய எந்த ஒரு காரணத்தையும்பற்றிய வெளிப்படையான **கருத்து**.

அவ்வாறு குறிப்பிடப்பட்டாலன்றி (எகா: மேற்பார்வையாளர் பெயர்) உங்கள் கணக்கெடுப்புப் பதில்களில் உங்கள் பெயரைக் **<u>குறிப்பிடவேண்டாம்</u>** அல்லது மற்ற தனி நபர்களுடைய பெயர்களைச் **<u>சேர்க்கவேண்டாம்</u>** என்று நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

<u>பயன்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்துதலின் நோக்கம்</u>:
கருத்துக்கணிப்பு வழங்குநர் உங்கள் கருத்துக்கணிப்பு பதில்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்களைத் திரட்டுவார். கருத்துக்கணிப்பு வழங்குநர்ஒரு தனித்து செயல்படும் ஆலோசகர் ஆவார், இவர் முடிவுகளைப் பகுத்தாய்ந்து, ரகசியத்தன்மையைத் தக்கவைப்பதற்கெனக் குறைந்தது 10 பதிலளிப்போரைக் கொண்ட குழுக்கள் அடிப்படையில் அவற்றைப் புள்ளிவிவரத் தொகுப்புகளாக அறிக்கையிடுவார். கருத்துக்கணிப்பு வழங்குநர் தனி நபர் கருத்துக்கணிப்பு பதில்களை Ball -க்கு வழங்கமாட்டார், Ball -க்கு அடிப்படைத் தரவுக் கோப்பு எதையும் வழங்கமாட்டார், இதன்மூலம், கருத்துக்கணிப்பிற்கான உங்கள் பதில்கள் ரகசியமாக இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

Ball புள்ளிவிவரத் தொகுப்புகளைப் பயன்படுத்திப் பணியாளர் மன நிறைவை மதிப்பிடும் மற்றும் மேம்படுத்தும். அது சட்டப்படி கோரப்பட்டாலன்றி, Ball புள்ளிவிவரத் தொகுப்புகளை Ball பெருநிறுவனக் குழுவுக்கு வெளியிலுள்ள மூன்றாம் நபர்கள் யாருக்கும் வெளிப்படுத்தாது.

## <u>விற்பனை அல்லது பகிர்தல் இல்லை</u>

Ball உங்கள் தனிப்பட்ட தரவுகளை விற்பதில்லை அல்லது பகிர்வதில்லை. இங்கு "பகிர்தல்" என்பதன் பொருள், சூழல்களுக்கு இடையிலான நடவடிக்கை விளம்பரப்படுத்தலுக்கென மூன்றாம் நபர்களுக்குத் தனிப்பட்ட தரவுகளை வெளிப்படுத்துதலாகும்.

## <u>உங்கள் தனிப்பட்ட தரவைப் பன்னாட்டளவில் பரிமாற்றுதல்</u>

கருத்துக்கணிப்பு <u>வழங்குநருக்குப் பரிமாற்றுதல்</u>: கருத்துக்கணிப்பு வழங்குநர்

உங்கள் தனிப்பட்ட தரவுகளை அமெரிக்காவில் சேமிக்கலாம், புள்ளிவிவரத் தொகுப்புகளைத் தயாரிக்கத் தேவைப்படுகிறபடி, நீங்கள் வசிக்கிற நாடு அல்லாத மற்ற நாடுகளுக்கு உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பரிமாற்றலாம். கருத்துக்கணிப்பு வழங்குநர் Ball உடன் எழுத்து வடிவ ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளார், தன்னுடைய சேவைகளை Ball -இன் அறிவுறுத்தலின்படி செயல்படுத்துகிறார். ஐரோப்பியப் பொருளாதாரப் பகுதி ("**EEA**"), சுவிட்சர்லாந்து, அல்லது யுனைட்டட் கிங்டமில் வசிக்கும் பணியாளர்களைப் பொறுத்தவரை, அமெரிக்கா போன்ற மூன்றாம் நாடுகளுக்குப் பரிமாற்றப்படும் தனிப்பட்ட தகவல்கள் போதுமான அளவு பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய, Ball மற்றும் கருத்துக்கணிப்பு வழங்குநர் தகுதியுள்ள மேற்பார்வை ஆற்றல் அமைப்பு அங்கீகரித்துள்ள தரநிலையான ஒப்பந்தச் சொற்றொடர்களைப் பயன்படுத்த ஒப்புக்கொண்டுள்ளார்கள். [**பொருந்தும் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும்**] என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன்மூலம் நீங்கள் பொருந்தும் வசதிகளுடைய ஒரு பிரதியைப் பெறலாம்.

<u>Ball பெருநிறுவனக் குழுவுக்குள் பரிமாற்றுதல்</u>: Ball புள்ளிவிவரத் தொகுப்புகளைப் பெருநிறுவனக் குழுவுக்குள் புள்ளிவிவரத் தொகுப்புகளை அணுகும் தொழில் தேவை உள்ள பணியாளர்களுடன் பகிர்ந்துகொள்ளும். இந்த மற்ற Ball பெருநிறுவனக் குழு உறுப்பினர்கள் நீங்கள் வசிக்கிற நாடு அல்லாத நாடுகளில் இருக்கலாம், அவர்கள் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் தரநிலை நீங்கள் வசிக்கும் நாட்டில் உள்ளதிலிருந்து மாறுபட்டிருக்கலாம். இந்த மற்ற Ball பெருநிறுவனக் குழு உறுப்பினர்கள் இருக்கக்கூடிய மற்ற நாடுகளின் பட்டியல் ஒன்றை இங்கு காணலாம்:

- தரவுப் பாதுகாப்பு: முக்கியத் தரவுப் பாதுகாப்புக்கான வட அமெரிக்கக் குழு 9200 W 108th Cir., Westminster, CO 80021 cdpgov@ball.com
- ஐரோப்பிய, மையக் கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கத் தரவுப் பாதுகாப்பு: முக்கியத் தரவுப் பாதுகாப்புக் குழு 100 Capability Green Luton LU1 3LG யுனைட்டட் கிங்டம் cdpeu@ball.com
- தரவுப் பாதுகாப்பு: தென் அமெரிக்க முக்கியத் தரவுப் பாதுகாப்புக் குழு Avenida das Américas 3434-Condomínio Mario Henrique SimonsenBloco 2/6 e 7 andares Barra da Tujica Rio de Janeiro 22640-102 Brasil cdpsa@ball.com

## <u>செயல்முறைப்படுத்தலுக்கான சட்ட அடிப்படை</u>

மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி உங்கள் தனி நபர் தரவைச் செயல்முறைப்படுத்தலானது, பணியாளர் ஊடாடலை மேம்படுத்துதல், திறமையாளர்களைத் தக்கவைத்துக்கொள்ளல் மற்றும் நேர்விதமான பணிச் சூழலை உருவாக்குதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய செயல்முறைப்படுத்தல் செயல்பாடுகளை நடத்துவதற்கான எங்கள் சட்டப்படியான ஆர்வங்களை நாடுவதற்கு Ball -க்குத் தேவைப்படுகிறது.

தேவையான இடங்களில் Ball உங்கள் ஒப்புதலைச் சார்ந்திருக்கும். கேள்வி 1 -க்கான கீழ்த்திறப்புப் பெட்டியில் "ஆம்" என்பதைத் தேர்ந்தெடுப்பதன்மூலம், கருத்துக்கணிப்பு வழங்குநர் Ball சார்பாக உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செயல்முறைப்படுத்த நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். கருத்துக்கணிப்புக்கான செயல்முறைப்படுத்தல் என்பது இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளபடி எந்தவொரு நுண்ணுணர்வுள்ள தனி நபர் தகவல்களையும் (எகா: இனக்குழு) திரட்டுதல் மற்றும் பன்னாட்டளவில் பரிமாற்றுதலையும் கொண்டிருக்கும். [**compliancealliance@ball.com**] என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்பு கொண்டு உங்கள் ஒப்புதலை நீங்கள் திரும்பப் பெற்றாலன்றி, உங்கள் ஒப்புதல் உங்கள் தனிப்பட்ட தரவுகளைத் திரட்ட, பயன்படுத்த, வெளிப்படுத்த, பன்னாட்டளவில் பரிமாற்றம் மற்றும் மற்ற விதங்களில் செயல்முறைப்படுத்தத் தொடர்ந்து பொருந்தும். ***இந்தக்*** கருத்துக்கணிப்பு ***தன்னார்வத்தின் அடிப்படையிலானது என்பதைத் தயவுசெய்து நினைவில் வைத்திருங்கள்.***

## தக்கவைத்தல்

பொருந்தும் சட்டம் இன்னும் நீண்ட அல்லது இன்னும் சுருக்கமான தக்கவைத்தல் காலகட்டம் ஒன்றைக் கோரினாலன்றி, Ball புள்ளிவிவர அறிக்கைகளை 5 ஆண்டுகளுக்குத் தக்கவைத்திருக்கும்.

## தானியங்கித் தீர்மானம் எடுத்தல் ஏதும் இல்லை:

Ball பெருநிறுவனக் குழுவின் உறுப்பினர்கள் யாரும் கணக்கெடுப்பின் முடிவுகள் தொடர்பாகத் தானியங்கி முறையில் எந்தத் தீர்மானங்களையும் எடுக்கமாட்டார்கள்.

## கூடுதல் தகவல்கள்

பின்வரும் தலைப்புகளைப்பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் தனியுரிமைக் கொள்கை - பணியாளர்கள் [Privacy-Policy-Employees.pdf (ball.com)] என்ற இடத்தில் காணலாம்:

- தனிப்பட்ட தரவு தொடர்பான உங்கள் உரிமைகள்
- உங்கள் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு
- பொருந்தும் தரவுப் பாதுகாப்பு அலுவலர் அல்லது பொறுப்பில் உள்ள நபர் ஒருவரைத் தொடர்புகொள்ளும் தகவல்கள்